**BRAMPTON** **Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**விதை விதைக்கும் சனிக்கிழமை தொடங்கி, தோட்டம் அமைக்கும் பருவத்தில் நுழையுங்கள்**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 24, 2023) – ப்ராம்ப்ட்டன் தோட்டக்கலை சமூக அமைப்புடன் இணைந்து இந்த மார்ச் மாதத்தில், விதை விதைக்கும் சனிக்கிழமையில், மீண்டும் அவரவரே நேரில் இருந்து தோட்டம் அமைப்பதற்கான பணியில் ஈடுபட ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் சமுதாயத்தினருக்கு அழைப்பு விடுக்கிறது.

ஒவ்வொரு வருடத்திலும் விதை விதைக்கும் சனிக்கிழமையன்று வஸந்த கால தோட்டம் அமைக்கும் பருவம் துவங்குகிறது. இந்த இலவசமான, குடும்பத்தினருக்கு ஏற்ற நிகழ்வானது, தோட்டம் அமைப்பது மற்றும் தோட்டக்கலை பற்றி அறிய, மற்றும் விதைகளைப் பரிமாறிக்கொள்ள மற்றும் வல்லுனர்களிடம் ஆலோசனைகளைப் பெற குடியிருப்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகிறது.  புதிதாக தோட்டம் அமைப்பவர்கள் மற்றும் அனுபவசாலிகள் அனைவரும் வரவேற்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளும்கூட உண்டு..

இந்த வருட பேச்சாளர்களில் அடங்குபவர்கள்:

- டாக் டர்ட்டி (Talk Dirty) பற்றி பேச ஷான் ஜேம்ஸ் (Sean James) : மண் மற்றும் அதில் வாழும் உயிரினங்கள்
- மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகளுக்கான தோட்டங்கள் பற்றி பேச லொர்ரெய்ன் ஜான்ஸன் (Lorraine Johnson): நண்பர்கள்தான், எதிரியல்ல (Friend not Foes)
- விதைகளைக் கொண்டு தாவரங்கள் வளர்த்தல் பற்றி கென் ப்ரவுன் (Ken Brown)
- மகத்தான காய்கறிப் பயிர்கள் வளர்ப்பது பற்றி ஜேம்ஸ் க்ரஹாம் (James Graham)

இந்தப் பேச்சாளர்களை சென்சுரி கார்டன்ஸ் ரிக்ரியேஷன் மையத்தில் (Century Gardens Recreation Centre) சந்திப்பதுடன் பல வியாபாரிகளையும் சந்தியுங்கள்.

**இந்த தேதியை ஒதுக்குங்கள்**

விதை விதைக்கும் சனிக்கிழமை

மார்ச் 11, காலை10  - பிற்பகல் 3

Century Gardens Recreation Centre

340 Vodden St E

Brampton, ON

L6V 2N2

மேற்கொண்டு விபரங்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/seedysaturday

**அறிஞர் கூற்றுக்கள்**

“இது தோட்டம் அமைப்பதைக் காட்டிலும் அதிக விஷயங்கள் பற்றியது. இது நிலைத்து நிற்கும் தன்மையை மையமாகக் கொண்ட பசுமையான, அதிக பிணைப்பு கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவது பற்றியது. தோட்டம் அமைப்பது என்பது பலருக்கும் தங்கள் இயல்பு வாழ்க்கையிலிருந்து விடுபடும் ஒரு விஷயமாகும்; நீங்கள் இப்போதுதான் தொடங்குபவர் என்றாலும் அல்லது மற்றொரு வளரும் பருவத்திற்கு தயாராகிவிட்டவர் என்றாலும், விதை விதக்கும் சனிக்கிழமையன்று உங்களைக் காண்போம் என்று நம்புகிறோம்.”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பசுமையான வாழ்க்கை வாழ்தல், தோட்டம் அமைப்பதினால் உண்டாகும் ஆரோக்கியபூர்வமான பலன்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றி ஒருசேர கற்றுக்கொள்வதில், இந்த ஆண்டு நேரில் நடக்கும் நிகழ்விற்கு மீண்டும் வருவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். விதை விதக்கும் சனிக்கிழமையன்று, ஒரு தசாப்த கால அளவில் வெற்றியுடன் நடைபெற்றுவரும் இந்தப் பிரபலமான நிகழ்வின்போது ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு விஷயம் கிடக்காமல் போகாது.”

*- ரொவீனா சான ட்டோஸ், தலைவர், சமுதாய சேவைகள் அமைப்பு, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 மற்றும் 5, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம், மற்றும் ஒவ்வொரு நாளும் நமது இலக்கை அடைய உதவுகின்ற முக்கிய முயற்சிகளில் நாம் கவனம் செலுத்துகிறோம். நமது சமூகத்தின் நிலைத்து நிற்கும் தன்மை, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்ற சிறுசிறு பழக்கவழக்கங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டறிய, விதை விதைக்கும் சனிக்கிழமை நம் அனைவருக்கும் ஒரு கற்றல் வாய்ப்பாக செயல்படுகிறது..”

*- மார்லன் கால்லிடீன், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்

multiculturalmedia@brampton.ca